பக்கங்கள்: நான்கு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 14 புதன்கிழமை (29 - 12 - 1999) VALAMPURI ஒலி: 10

# தென்மராட்சியில் தாக்குதல் தீவிரம்

# பதற்றமடைந்த நிலையில் மக்கள்!

## பாதுகாப்பான இடங்களில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை அண்டிய பகுதிகளில்ஹெலி, விமானக்குண்டுத் தாக்குதல் பரவலாக இடம்பெறுள்ளன.

இத்தாக்குதல்களினால் மக்கள் மத்தியில் பதற்றமும், பீதியும் தோன்றியுள்ளதுடன் மக்களை இடம் பெயரவும் வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும், தென்மராட்சிக் கரையோரப் பகுதிகளில் நேற்றுப் பரவலாக ஷெல்கள் வந்து வீழ்ந்தன. தனங்கிளப்பு, கோவிலாக்கண்டி, சாவகச்சேரி கச்சாய் வீதி போன்ற இடங்களில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் அப்பகுதிகள் அதிர்ந்த வண்ணம் இருந்தன

இச்சம்பவத்தினால் இப்பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதாகவும், சாவகச்சேரி நகர வர்த்தக நிலையங்கள் யாவும் சோபை இழந்து மூடப்பட்டிருந்ததாகவும் சாவகச்சேரி பிரதான வீதி மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகள் மக்கள் நடமாட்டம் அற்று வெறிச்சோடிப் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நாவற்குழி

(4ஆம் பச்கம் பார்க்க)

## மணியம்தோட்டத்தில் ஹெலி தாக்கு: ஒரு வீடு சேதம் மக்கள் பதற்றம்

(அரியாலை)

மணியம் தோட்டம் பகுதியில் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் ஹெலி கொப்டர் ஒன்று மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் இரு ஓலை வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராகின.

குகன்வீதி நெடுங்குளம்பகுதியிலிந்த இரு வீடுகளுமே எரிந்து சாம்பராகியது.

சிவபாதம், அருளம்பலம் ஆகியோரது வீடுகளே எரிந்து சாம்பராகியது.

இத் தாக்குதலினால் இப்பகுதியில் பதற்ற நிலை நீடிப்பதாகவும், அப்பகுதியில் புகை மண்டலம் எழுந்துள்ளதை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இருந்து அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக நேரில் கண்டவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

## பெருமளவில் மக்கள் இடம் பெயர்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு, மறவன்புலோவு ஆகிய இடங்களிலிருந்து மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் கைதடி நோக்கி சென்றுகொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சைக்கிள்களிலும் கால்நடையாகவும் வண்டில்களிலும் பெருமளவில் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மட்டுவில் பகுதியை நோக்கி செல்வதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புத்தாயிரமாம் ஆண்டை எதிர்நேக்கிய மக்களுக்கு இத்தகை சம்பவம் மிகுந்த வேதனையைக் கொடுத்துள்ளது என்பதை இடம்பெயரும் மக்களின் முகங்களில் இருந்து அறிந்துகெள்ள முடிகிறது.

## மண்டைதீவு இராணுவ முகாம் பலப் படுத்தப்பட்டுத் தயார் நிலையில்

(கொழும்பு)

மண்டைதீவுப் பகுதியில் முன்னேப்போதும் இல்லா தவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பு செய்திகள் நேற்று தெரிவித்தன.

புதிய சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் நவீன ஆயுதங்கள் பலவும் பொருத்தப்பட்டு தயார் நிலையில் படையினர் உள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

எத்தகைய நிலையையும் சமாளிக்கும் நோக்கமாகிய இத்தகைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் படைத்தரப்பை ஆதாரம் காட்டி அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

### நிந்தவூர் பகுதியில்

## இனம்தெரியா தோரின் துப்பாக்கிச் சூட்டில் ஈ. பி. டி. பி. உறுப்பினர் பலியானார்

(கல்முனை)

மட்டக்களப்பு நிந்தவூர் பகுதியில் ஈ. பி. டி. பி. உறுப்பினர் தர்மலிங்கம் நிமலதாசன் நேற்று இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காரைதீவில் இருந்து நிந்தவூருக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பொழுதே இத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.

சடலம் விசாரணைக்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஓயாதஅலைகள் - 3 நடவடிக்கையில் உயிரிழந்தோரின் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் போதுவிடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்தவர்களின் விபரம் வருமாறு:

★ கரும்புலி மேஜர் மீனா
நடராசா மேனகா யாழ்ப்பாணம்.

★ கரும்புலி கப்டன் நாகராணி
அருமைநாயகம் ரோகினி
யாழ்ப்பணம்,

★ கரும்புலி மேஜர் ஆதித்தன்
பழனியண்டி சுதாகரன்
பதுளை,

★ கடற் சிறுத்தை கரும்புலி மேஜர் நந்தன்
தர்மராசா தயாளன் கிளிநெச்சி

★ வீரவேங்கை நெல்சன்
நடராசா தவறஞ்சன் யாழ்ப்பாணம்.

★ வீரவேங்கை முதல்வன்
விக்டர் லோகநாதன்டெலஸ்
கிளிநொச்சி.

★ வீரவேங்கை கபிலன்
விவேகநந்தராஜா விஜிதரன்
திருமலை.

★ வீரவேங்கை வீரக்கொடியோன்
நல்லைநாதன் பிரியகாந்தன்
முல்லைத்தீவு.

★ வீரவேங்கை யாழ்விழி
அல்லது யாழ்மொழி
சிவசுப்பிரமணியம் சுகந்தினி

(4ஆம் பக்கம் பார்க்க]

## வன்னிப்பகுதியில் போதியஉணவு இல்லை பட்டினியின் விளிம்பில் மக்கள்

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் போதியளவு உணவுப்பொருள் இன்மையால் அங்குள்ள மக்கள் பட்டினியால் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதாக அரச அதிபர் திரு. ஐயாத்துரை தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தகவல்தருகையில் ஒருகிலோ அரிசி 40 ரூபாவுற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகம் செய்யப்படுவதாகும்

மார்கழி மாதத்திற்கான நிவாரணப் பொருட்கள் இன்னமும் மக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் அரிசி கூடுதலாகத் தேவைப்படுவதாகவும் அரச அதிபர்தெரிவித்தார்.

## மோதலினால் இடம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

வன்னிப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக அங்குள்ள நலன்புரி நிலையங்களின் கூரைகள் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கூரைகளைத் திருத்தியமைக்கும் நோக்கில் யூ, என் எச். சி. ஆர் பதில் தரவில்லையென்றும் தெரிவித்த அந்த அதிகாரி,

மோதல்கள் காரணமாக கண்டாவளையில் இருந்து இடம்பெயர்ந்து அயல் கிராமங்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படவில்லை எனவும்' மூன்று நாள் சமைத்த உணவுவழங்கியதாவும் அவர் தெரிவித்தார்,

## தற்கொலையாளி எவ்வழியால் வந்தார் என்பது எனக்குத் தெரியாது

### குண்டுவெடிப்பு விசாரணையில் அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு ஜனாதிபதி இரவு 7.10க்கு மேடைக்கு வந்தார் அங்கு பேசிவிட்டு 9. 10க்கு இறங்கும்போது குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்றதாகவும் தன்னுடன் கடமை ஆற்றிய 4பேர் இறந்ததாகவும் இவர்களில் ஒருவர் இராணுவம், 3பேர் பொலிசார் என்றும் சாட்சியமளித்த ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச்சேர்ந்த குமாசிங்க இவ்வாறு கூறினார்.

கொழும்புபிரதம நீதவான் ஜி. டி குலதிலக முன்னிலையில் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாட்சியை நீதவான் கூட்ட மண்டபத்திற்கு தற்கொலைக் குண்டு தாரி எப்படி வந்தார் என்றுகேட்ட போது சாட்சி குணசிங்க சாட்சியமளிக்கையில் அமைச்சர்கள் வருவதற்குஒருவழியும், பொதுமக்கள் வருவதற்கு இன்னொரு வழியும் இருந்தது

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வட்டு. தொகுதி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும்

## வலி. மே.பி. தலைவர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தொகுதியின் அபிவுருத்தி நடவடிக்கைகள் குறித்து அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கைகள் எதுவும் உருப்படியாக நிறைவேற்றப்படாமைகுறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதனைக் கருத்தில்க் கொண்டு இந்தப் பகுதியின் அபிவிருத்திக்கென கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு நிதி ஒதுக்கித் தருமாறு வட்டு. தொகுதியின் ஈ. பி. டி. பி. அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைவருமான ந. திரிலோகநாதன் வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது, எதிர்வரும் சிங்கள—தமிழ் புத்தாண்டிற்கு முன் கீழ்க் குறிப்பிடப்படும் அபிவிருத்தித் திட்டங்களிற்கு தாங்கள் பணம் ஒதுக்கித் தருவீர்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

பண ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய இடங்களாவன; சங்கானை சுப்பர்மடம் சந்தை ரூபா 50 இலட்சம், காரைநகர் சிவன்கோயில் வீதி திருத்தம் 10 இலட்சம், அராலி புதுச்சந்தை திருத்தம் 20 இலட்சம், வட்டுக்கோட்டை மேற்குச் சந்தை 10 இலட்சம், வட்டு. மத்திய சந்தை 20 இலட்சம், சுழிபுரம் இறாத்தலடி வீதி அணைச் சுவர்-20 இலட்சம், பண்ணாகம் வீதி-10 இலட்சம், கள்ளி வீதி, சங்கரத்தை 10 இலட்சம், உடையார் வீதி, அராலி -5 இலட்சம், முதலி கோயில் வீதி வட்டுக்கோட்டை -10 இலட்சம், சங்கானை ஆஸ்பத்திரி வீதி, 10 இலட்சம், வீமன்கலட்டி வீதி அராலி-10 இலட்சம், அந்திரான் 2 ஆம் ஒழுங்கை 10 இலட்சம், சம்பாவளை வீதி, அராலி- 5 இலட்சம், அந்திரான் வாய்க்கால் திருத்தம்-5 இலட்சம், மாவடி வீதி சித்தன்கேணி -5 இலட்சம், காரைநகர் கோயில் வீதி -வெளிச்சவீடு வரை 10இலட்சம், பாரதி வீதி சங்கானை-5இலட்சம், வட்டுக்கோட்டை சந்தை வீதி - 8 இலட்சம், தேவாலய வீதி, மூளாய் 9 இலட்சம், வேரம் 2 ஆம் ஒழுங்கை மூளாய்- 5 இலட்சம்.

இந்த வேண்டுகோள் அச்சடிக்கப்பட்ட பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகநாதன், ஈ. பி. டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி. டி. பி. யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே. ஜெகன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [க]

## 2 இலட்சம் செலவில் நீர் விநியோகம்

(புலோலி)

பருத்தித்துறை கால் நடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு சுமார் 2 இலட்சம் ரூபா செலவில் நீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை வடக்கு கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார பிரிவு ஒதுக்கியிருந்தது.

தற்போது குழாய்க்கிணறு தண்ணீர்தாங்கி அமைப்பு வேலைகள பூர்த்தியடைந்துள்ளன. வெகு விரைவில் இந் நீர் விநியோகம் நடைபெறவுள்ளது. (52)

## தொடரும் கற்கை நெறி

(கோப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவினரால் நடாத்தப்பட்டுவரும் சோதிடமும் வானியலும் இலவச கற்கை நெறி 2000 ஆம் ஆண்டிலும் தொடரவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியுமென இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு செயலாளர் இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (க-6)

## மட்டுவிலில் கட்டட வேலைகள்

(மட்டுவில்)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில், மாணவர்களின் விவசாயப்பாடத்திற்கான, விவசாயத்தொகுதியும், நாற்று மேடைத் தொகுதியும் அமைப்பதற்கான கட்டட வேலைகள விரைவில் ஆரம்பமாக உள்ளன.

இவ் விவசாயத் தொகுதி, நாற்றுமேடைத் தொகுதியை (கிறீன் றூம்) அமைப்பதற்கென கல்விப் பகுதியினரால் 3 லட்சம் ரூபா நிதியாக ஒதுக்கப்பட்டுள்ளது. (க-10)

## மாகியம்பதியில் இன்று ஒளி விழா

அளவெட்டி, மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலய ஒளி விழா பங்குத் தந்தை அருட் திரு. அ. அன்ரன் றோக் தலைமையில் இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சி. பத்மநாதன்**

(ஆதீனகர்த்தா, நாயன் மார்க்கட்டு ஸ்ரீபிச்சாடன மூர்த்தி ஆலயம்)

பிறப்பு: 03-11-1922

இறப்பு: 09-01-1999

ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.

(00015)

## வைத்திய அதிகாரி நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாக டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையின் பொறுப்புவாய்ந்த அதிகாரியாகவும் இவர் கடமையாற்றுவார். (-27)

## நாளை பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

40 வருடங்கள் தபால் திணைக்களத்தில் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு. எம். தர்மராஜனை கௌரவிக்கும் பிரிவுபசாரவைபவம் நாளை 30ம் திகதி இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை அஞ்சல் அதிபர் எம். சண்முகம் தலைமையில் மேற்படி அலுவலகத்தில் இவ் வைபவம் இடம்பெறவுள்ளது.

## படையினர் சுற்றிவளைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதி கடந்தவாரம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்வயல், மீசாலை, வாகையடி, கிராம்புவில் ஆகிய பகுதிகளே படையினரால் சோதனையிடப்பட்டவையாகும்.

இந்தச் சம்பவத்தில் பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-21)

## (இராசிபலன்)

29-12-1999 புதன் கிழமை (தமிழுக்கு மார்கழி 14)

ஸப்தமி பகல் 1-49 வரை; உத்தரம் மாலை 6-59 வரை. அமிர்தசித்தயோகம், பகல் 1-49 க்கு மேல் அட்டமி. இராகுகாலம் 12-58 முதல் 2-28 வரை, சுபநேரம் காலை 10-30 முதல் 11-00 வரை.

மேடம்: புதிய நட்பு, தொழில் உற்சாகம், பணப்புளக்கம்.

இடபம்: கூனிக்குறுகுதல், தவறான செயல், அகால உணவு.

மிதுனம்: அதிகாரிகள் சிறப்பு, களிப்படைதல், தெய்வ தரிசனம்.

கடகம்: உதாசீனம், பெண் பகை, ஆதாயக்குறைவு.

சிங்கம்: பெற்றோர் அறிவுரை, மனத் தெரிவு, கடித நன்மை.

கன்னி: மகிழ்ச்சியான சம்பவம், பிறருக்கு உதவுதல் நோய்தணிவு.

துலாம்: பயப்பிராந்தி, தொழில் சுமை, வேண்டாத உறவு.

விருச்சிகம்: விரும்பியதை அடைதல், காரிய சித்தி, தியாக சிந்தை.

தனுசு: பகை நீங்குதல், தொழில் முதலீடு, கடன் வசூல்.

மகரம்: பிறர் குறுக்கீடு, வீண் உபதேசம், கற்பனை.

கும்பம்: பறிபோதல், குடும்ப பிரிவு, உணர்ச்சிவசப்படல்.

மீனம்: நினைத்தது கைகூடும், தொழில் லாபம், பெரியோர் ஆசி.

(இலங்கைநேரப்படி கணிக்கப்பட்டது.

-அனுஷியா.

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(அச்சுவேலி)

சுட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மார்கழி மாதத்திற்கான சமுர்த்தி நிவாரணம் மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கான 74 எ.பி. நிவாரணமும் வழங்கப்பட்டு வருகிறது.

## மீரிகமவில் சுதந்திர வர்த்தக வலயம் பத்தாயிரம்பேர் தொழில் பெறுவர்

அண்மையில் மீரிகம நகரில் ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலையத்துள் உள்ள தொழிற்சாலைகளுள் மூன்று தமது உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன,

இத் தொழிற்சாலைகளில் மொத்தம் 1500பேர் ஏற்கனவே வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். 2000ம் ஆண்டில் மொத்தம் 10,000 பேரிற்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியும் என்றும், வரும் மார்ச் மாதத்தில் மேலும் 3000 பேரிற்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட உள்ளதாகவும், இதனோடு தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

## தகவல் தொடர்பு ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்துள்ளன

(கொழும்பு)

சில தனியார் தொடர்பு சாதன ஊடகங்களும் தேசிய பத்திரிகைகள் சிலவும் பக்கச்சார்பான முறையில் நடந்து கொண்டுள்ளன. அத்தோடு அலைவரிசை9விவகாரம் தொடர்பாக மிகவும் கீழ்த்தரமான செய்திகளை வேண்டுமென்றே திரிவுபடுத்திக் குறிப்பிட்டுள்ளன.

மேற்கண்டவாறு ஜனாதிபதியின் தகவல்துறை ஆலோசகரானசனத் குணத்திலக நேற்று முன்தினம் தேசிய ரூபவாஹினி சேவையியில் நடைபெற்ற ஜனமண்டல நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றிஅவர்மேலும் தெரிவிக்கையில்; சிலஊடகங்கள் ஜனாதிபதியைக்கூட இதனோடு தொடர்புபடுத்தி கூறியுள்ளன. லங்காதீப, திவயின போன்ற பத்திரிகைகள் இது தொடர்பாக விமர்சித்து வந்ததாகவும் பின்னர் ல்ங்காதீப பத்திரிகை இதிலிருந்து விலகி கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இத்தோடு ஐ.தே.க. விற்கு ஆதரவான சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியரும்தானும் கலந்து கொண்ட விவாதம் ஒன்றின்போது தனது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது அப்பத்திரிகையின் ஆசிரியர் விவாதத்தில் இருந்து வெளிநடப்புச் செய்த சம்பவத்தையும் அவர் அங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

## கரவெட்டி பிரதேச செயலகத்தில் சர்வதேச ஊனமுற்றோர் தினம்

கரவெட்டி பிரதேச செயலகம் நடாத்தும் சர்வதேச ஊனமுற்றோர் தினம் இன்று புதன்கிழமை நடைபெற உள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வுகளுக்கு பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகிப்பார். கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் இ. சிவபுண்ணியம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் சி. பசுபதி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

ஊனமுற்ற நால்வருக்கு முச்சக்கரவண்டி வழங்கப்படுவதுடன் அலுவலக ஊழியர்கள் பங்கு பற்றும் ஊனமுற்றோர் தொடர்பான கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


## விசேட கலந்துரையாடல்

இடம்- டி. எம். ஐ. கல்வி நிலையம்

காலம்- 30-12-99 வியாழக்கிழமை

நேரம்- காலை 10.00 மணி

அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமுகம் தரவும்.

நன்றி.

[00016] தலைவர்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சமயாசமய ஊழியர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருதல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து சமயாசமய காவலாளி, வீதி / சுகாதாரத் தொழிலாளி ஆகிய பதவிகளுக்கு 2000.01.10 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வேலை செய்யும் நாட்களுக்கு சம்பளம் வழங்கப்படும். தகமை, ஏனைய விபரங்கள் தலைமையலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் ஒட்டப்பட்ட அறிவித்தல்களில் பார்வையிடலாம். தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்களிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

**ந. திரிலோகநாதன்,**
தலைவர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம்.
1999.12.28

(00017)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு
- குறள்

# வலம்புரி

## இழந்தது உயிர்கள் மட்டுமல்ல

சொந்த மண்ணில் உழைத்து உண்ண முடியாது உரிய இடம் சென்று உடன் திரும்ப முடியாது உறவுகளைச் சந்தித்து தங்கி வாழ முடியாது. துன்ப துயரங்களில் பங்கேற்க முடியாது போரின் முகங்கள் பலவடிவங்களில் கட்டுப் படுத்தும் சட்ட திட்டங்களால் துவண்டு வாடுவோரின் மன விரக்தி வயது பேதமின்றி எல்லோரையும் பாதிக்கின்றது என்பது மக்களின் இதய ஒலி எழுத்தாளன் யோசெப் பாலாவின் எழுது கோல் வடித்த கருத்தோவியம்.

இன்று எமது மண்ணில் போரின் அனர்த்தங்களால் ஏற்பட்டபொருள் சிதைவுகளைவிட உறவுச் சிதைவுகளே மக்களை பெரிதும் பாதித்துள்ளது. உடலுள ஆன்மீக சிதைவுகளால் துன்பப்படுவோரே இன்று சமூகத்தில் அதிகமாக காணப்படுகிறார்கள். இவற்றைத் தீர்ப்பதற்கு பணங்களல்ல நல்ல மனங்களே தேவை என உளவியலாளர் அருட்தந்தை திரு. டேமியன் அடிகள் அங்கலாய்க்கிறார்.

இந்த மண்ணின் விடிவு உள, உடல் சேமத்தில் தங்கியிருக்கிறது என்பது அசைக்க முடியாத உண்மையாகும். எங்கள் முதாதையோர்கள் கண்ணியைக் கண்டறியார் ஆனால் கண்ணியத்தைத் துய்த்துள்ளார்கள் நிலை தளரா உளத்தோடு உலாவி இருக்கிறார்கள் அன்பெனும் நீரில் தோய்ந்திருக்கிறார்கள். கொட்டியும் ஆம்பலும் போலதம் உறவினருடன் ஒட்டி உறவாடி இருக்கிறார்கள் உழுவலன்வொடு உயர்ந்து நிமிர்ந்து நின்றிருக்கிறார்கள் ஆனால் இன்றோ அழுகுரலின் அவலங்களுக்கிடையே ஆற்றொணாத் துன்பத்தில் மூழ்கித் திக்குமுக்காடுகிறார்கள் நிலையற்ற தன்மையில் நிமிடக் கணக்கில் வாழ்வை ஓட்டுகிறார்கள், இந்த துன்ப சாகரத்தில் இருந்து விடுதலை ஒன்றை வேண்டி நிற்கிறார்கள் கொடுத்த விலைக்கு ஏற்ப சுகம் காணத்துடிக்கிறார்கள் பகைப்புலத்தைப் பற்றிப் பிடிப்பவர்களாய் மக்கள் இல்லை யாவரும் கேளீர் என்ற மகத்தான பண்பாட்டைப் பேணவே விழைகிறார்கள்.

நிம்மதி தேடி அலைகின்ற உள்ளங்கள் நிலையான சமாதானவாழ்வை புத்தாயிரம் ஆண்டிலாவது பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

- அன்புடன்ஆசிரியர்

## பரீட்சைகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

கோப்பாய் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளின் ஆண்டிறிதிப் பரீட்சைகள் இம்மாதம் 27ம் திகதி முதல் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முதலாம் வருட ஆசிரிய மாணர்வர்களிற்கான பரீட்சை 27, 28ம் திகதிகளிலும், இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களிற்கான பரீட்சை 28 ஆம் திகதியும் ஆரம்பமாயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பரா வெளிச்சம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி தென்கிழக்கு கடற்கரையோரங்களில் பரா வெளிச்சங்கள் இரவு வேளைகளில் தென்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-21)

## நிதி ஒதுக்கீடு

[மந்திகை]

மழையினால் பழுதடைந்துள்ள கட்டைவேலி சனசமூக நிலையத்திற்கு உடனடி திருத்த வேலைக்காக பிரதேச சபை நிதியிலிருந்து 20ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைவர் வி. நடராஜா தெரிவித்துள்ளார். (23)

# இலங்கையில் தொடரும்யுத்தத்தினால் பெருமளவினர் ஊனமுற்றுள்ளனர்

### மைக்கல் லப்ஸ்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் போரினால் இன்று ஆயிரக்கணக்கானோர் ஊனமுற்றுள்ளனர். இவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டிய அதேவேளையில் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது.

இவ்வாறு நியூசிலாந்தில் பிறந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரரும் இன ஒதுக்கல்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வருபவருமான மைக்கல் லப்ஸ்கி (50) தெரிவித்துள்ளார்.

தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு வந்திருந்த வேளை கொழும்பில் நடைபெற்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் தொடர்ந்தும் போர் இடம்பெறக் கூடாது என்று தீர்மானிப்பது இலங்கையரின் கைகளிலேயே உள்ளது. போரை நிறுத்துவது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள படையினரின் கைகளில் இல்லை மாறாக போரைத் தொடர்ந்தும் நடாத்தி வருகின்ற அரசியல் தலைமைகளே இது பற்றிச் சிந்தித்துச் சீரிய முடிவுகளை எடுக்க வேண்டும். என்று மேலும் அவர் தெரிவித்தார்,

## சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் 7 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ். பிரதே செயலகத்தில் கடந்த இரண்டு வருடங்களாக சமுர்த்தி ஊக்குவிப்பாளராக கடமையாற்றிய ஏழு பேர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 1 ற்கு நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் இதுவரை காலமும் சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் கடமையாற்றினார்நிரந்தர நியமனத்தின் பின்னர் சமுர்த்தி அதிகார சபையின் கீழ் கடமையாற்றவுள்ளனர். இவர்களின் பெயர் விவரம் வருமாறு-

சி, சிறிதரன் (யா / 86 சோனகத்தெரு தெற்கு)
பி. தமிழரசி (யா/84 நாவாந்துறை தெற்கு)
சோ. வாகினி (யா / 83 கொட்டடி)
ப. கோகிலராணி (யா / 61 நெடுங்குளம்)
ர. விஷாந்தினி (யா / 70 குருநகர் கிழக்கு)
சி. அஞ்சலா சுகந்தி (யா / 78 அத்தியடி)
கு. அனுசியா (யா / 66 ஈச்சமோட்டை)

## மூவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட மூவர் விடுதலை செய்யப்பட்டனர்.

தர்மலிங்கம் விஜயகுமார் (யாழ்ப்பாணம்), ம. பிரேமச்சந்திரன், கு. இராசேந்திரன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

# செச்சென் தலைநகர் குறொஸ்னியை ரஷ்ய படை விரைவில் கைப்பற்றும்

### ரஷ்ய வானொலி அறிவிப்பு

(மொஸ்கோ)

செச்செனிய தலைநகர் குறொஸ்னியைச் சூழ்ந்துள்ள ரஷ்யப் படையினர் இன்னும் மூன்று வாரத்தில் குறொஸ்னியைக் கைப்பற்றி விடுவார்கள் என ரஷ்ய வானொலி நேற்று தெரிவித்துள்ளது.

அவ் வானொலி மேலும் தெரிவிக்கையில்; குறொஸ்னியின் தெற்கு, தென்மேற்கு பகுதிகளில் இடம் பெறும் மோதல்களின் நேரடித் தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு ரஷ்யப் படையினர் மெதுவாகவே முன்னேறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறொஸ்னியில் இருந்து இன்னமும் வெளியேறாதுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் உணவுத் தட்டுப்பாட்டினை எதிர்நோக்குவதோடு, மின் விநியோகம் இன்மையால் அப்பகுதி இருளில் மூழ்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3 மாதத்திற்கும் மேலாக செச்செனியா மீது தாக்குதல் நடத்தி வரும் ரஷ்ய படையினர் தலைநகர் குறொஸ்னியைத் தவிர ஏனைய பகுதிகளைக் கைப்பற்றி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறொஸ்னியிலிருந்து பொதுமக்களை எவ்வாறு வெளியேற்றுவது என்பது தொடர்பாக ரஷ்ய அவசரகால அமைச்சர் சோஜி ஷொய்கு செச்செனியத் தலைவர் அஸ்லன் மஸ்கடொவின் பிரதிநிதியை ஷெஷியா பிராந்தியத்தில் வைத்து கலந்துரையாடியுள்ளதாக இடார் ராஸ் செய்திஸ்தாபனம் அண்மையில் அறிவித்துள்ளது.

சுமார் 45,000 பொதுமக்கள் குகைகளில் ஒளிந்துள்ளதாகவும் உணவு, மற்றும் நீர் போன்ற தேவைகளைப் பெறுவதற்காகவே இவர்கள் வெளியே வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சீனாவில் தீ விபத்து 20 பேர் பலி

(பீக்சிங்)

சீனாவின் வடகிழக்கு மாகாணமான ''ஜிலின்'' தலைநகரான சாங்சன்னில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 55 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

மேற்படி ஹோட்டலில் நத்தார் விருந்து நிகழ்ச்சி இடம் பெற்றுக் கொண்டிருந்த போது திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதனாலேயே 20 பேரும் மூச்சுத் திணறி மாண்டுள்ளனர்:

## பாலஸ்தீன கைதிகள்

## 26 பேர் விரைவில் விடுதலையாவர் இஸ்ரேலிய அமைச்சரவை இணக்கம்

(தெல்அவிவ்)

பாலஸ்தீனக் கைதிகள் 26 பேரை விடுதலை செய்வதற்கு தமது அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் எஃகுல் பராக் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய வானொலி நேற்று தெரிவித்தது.

பாலஸ்தீன அதிபர் ஜஸீர் அரபாத்துடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அந்த 26 கைதிகளும் ஓரிரு தினங்களில் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் மேலும் 6 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளதாக அவ் வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் இஸ்ரேலின் இந்த முடிவை பாலஸ்தீனியர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இஸ்ரேலிய அரசாங்கம் இதுவரை 350 பாலஸ்தீன கைதிகளை விடுதலை செய்துள்ள போதிலும் இன்னும் சுமார் 2000 வரையான பாலஸ்தீனக் கைதிகள்வரையில் இஸ்ரேலில் சிறைவாசம் அனுபவிப்பதாக பாலஸ்தீனர்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-14)

## குழந்தை கடித்ததில் இறந்த பாம்பு மகாராஷ்டிர மக்கள் வியப்பு

(கோலாலம்பூர்)

மகாராஷ்டிர மாநிலத்தின் ஓர் கிராமத்தில் ஒன்பது மாதங்கள் நிரம்பிய ரிதுஜா என்ற குழந்தை அருகே சென்றுகொண்டிருந்த பாம்பைப் பிடித்துக் கடித்ததில் அப் பாம்பு அதே இடத்தில் இறந்து விட்டது.

குழந்தை ரிதுஜா தன் வீட்டு வாசலில் தரையில் விளையாடிக் கொண்டிருந்த போது அருகில் உள்ள செடியின் பக்கத்தில் ஏதோ சென்றதை பார்த்ததும் அதை ஒரு விளையாட்டுப் பொருள் என நினைத்து எடுத்துக் கடித்து விட்டது. குழந்தையின் கடியினால் பாம்பு உடனேயே இறந்து விட்டது.

சிறிது நேரத்தில் குழந்தையின் பெற்றோர் அங்கே வந்த போது தான் விடயம் புரிந்தது.

பதற்றமடைந்த பெற்றோர் உடனடியாகக் குழந்தையை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தைக்கு பாதிப்பு ஏதும் இல்லை என்று கூறியுள்ளனர்.

## அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட வேண்டும்

### பாக். அமைச்சர் வலியுறுத்து

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடாவிட்டால் பாகிஸ்தான் அணுப் பரிசோதனைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப் போவதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அடிஸ் சாதர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அணு ஆயுத தடை ஒப்பந்தம்சம்பந்தமாக நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட எச்சரிக்கையை அவர்விடுத்துள்ளார்.

மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது அணு ஆயுத உற்பத்தியை ஒரு போதும் தடை செய்யப் போவதில்லை எனவும் கூறிய அவர் அணுவாயுத தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும், இந்தியா மீதான தடைகள் தளர்த்தப்படுவதற்கும் எந்தவித தொடர்பும் கிடையாதென்றும் அவர் கூறியுள்ளார்.

## 12 பேர் பலி!

(புதுடில்லி)

தமிழ் நாட்டின் திண்டுக்கல் நகரில் பயணிகள் ரயில் ஒன்று வாகனமொன்றுடன் மோதிக் கொண்டதில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாயும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

திண்டுக்கல் நகரில் இருந்து சுமார் 8 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ரயில் பாதைச் சாலைக் கடப்பில் வந்துகொண்டிருந்த வாகனத்துடன் ரயில் நேருக்கு நேர் மோதிக் கொண்டதிலே இந்த விபத்து இடம்பெற்றது.

# 'இன்ரசிற்றி' ரயில் மீது தாக்குதல்

# 7பெட்டிகள் தடம்புரண்டன பலர்காயம்

[கொழும்பு]

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் சென்று கொண்டிருந்த 'இன்ரசிற்றி' புகையிரதம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ரயில் இஞ்சின் சேதமடைந்ததாகவும், 7 பெட்டிகள் தடம்புரண்டதாகவும், இரு ஊழியர்கள் காயமடைந்ததாகவும், ரயில்வேப்பகுதி நேற்று அறிவித்தது.

நேற்று முன்தினம் இரவு 10-50 மணியளவில் மதகுவைத்த புலம் என்னும் பகுதியில் இக்கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது.

இரவுக் கடமையை முடித்துவிட்டுச் சென்ற ரயில்வே ஊழியர்களே இந்த ரயிலில் பயணம் செய்ததாகவும் மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது,

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்திற்கிடமானோர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியாவில் குண்டுத் தாக்குதலுக்கு ரயில் இலக்காகியதைத் தொடர்ந்து வடபகுதிக்கான ரயில் சேவை மதவாச்சியுடன் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் மதவாச்சிக்கும் வவுனியாவிற்கும் இடையே பயணிகளுக்கான பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன,

இதேவேளையில் இச்சம்பவத்தினால் வடபகுதிக்கான ரயில்சேவை பாதிப்படையமாட்டாது என போக்குவரத்துத்துறை அமைச்சர் ஏ, எச். எம். பௌசி தெரிவித்துள்ளார்;

## எதிர்வரும் தைமாதம் முதல் வாரம் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும்

(கொழும்பு)

புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரி மாதம் முதல்வாரத்தில் நிரந்தர திருமலை-காங்கேசன்துறை பயணிகள் கப்பல்சேவை ஆரம்பமகவுள்ளதாக நம்பகமாக தெரியவந்துள்ளது.

திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை ஒன்றை நிரந்தரமாக நடத்துவதற்கு சிங்களவர்த்தகர் ஒருவருக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைத் தொடர்ந்து சிங்கள வர்த்தகர் ஒருவர் யப்பானில் இருந்து இந்த ஆடம்பரக் கப்பலை கொள்வனவு செய்து, அக்கப்பல் தற்பேது சிங்கப்பூரில் தரித்து நிற்பதாகவும், இன்று கொழும்புக்கு வரவிருப்பதாகவும் அறியவருகிறது.

இக்கப்பல் சேவையின் போது ஒருவழிக்கட்டணமாக 4500ரூபாவும், இருவழிக்கட்டணமாக 9000ரூபாவும் அறவிடுவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும், கட்டணம் தொடர்பாக திட்டவட்டமாக எதுவித தீர்மானமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தல் வன்முறைகள் இருவாரத்துள் விசாரித்து முடிக்கவும்

(கொழும்பு)

நடந்துமுடிந்தஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற வன்செயல்கள் சம்பந்தமான முறைப்பாடுகளை இருவாரகாலத்திற்குள் முடிக்குமாறு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் பணித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தேர்தல்தினத்தன்று வரையும் நாடெங்கிலும் 1319 வன்முறைச் சம்பவங்களும், தேர்தல் தினத்தன்று மட்டும் 437வன்முறைச்சம்பவங்களும் தேர்தலும் பின்னர் 40 வன்முறைகளும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊர்காவற்றுறையில் வீடமைப்புத் திட்டம் அரச அதிபர் ஆரம்பித்து வைப்பார்

ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டமைப்பின் ஆதரவுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கரம்பன் கிழக்கு, காம்பன் மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டம் இன்று புதன் கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் இந் நிகழ்வில் கலந்து கொண்டு வீடமைப்புத் திட்டத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பார்.

## விளையாட்டு உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சை ஜன. 22, 23,இல்

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நடத்தப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி 22, 23, ஆகிய திகதிகளில் நடைபெறும்.

யாழ்ப்பாண செயலகத்தில் நடைபெறவுள்ள இந் நேர்முகப் பரீட்சைக்கு வதிவிடச் சான்றிதழ் பிரதேச மாவட்ட, மாகாண மட்டத்திலான விளையாட்டுத் துறை தகைமைச் சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் கொண்டு வர வேண்டுமெனவும் வடக்கு கிழக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலா நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்

## விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்).

நாவர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில் நேற்று இரவு 7.30மணியளவில் இடம்பெற்ற லொறி சைக்கிள் விபத்தில் தலையில் காயமடைந் நபர் ஒருவர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த எஸ். செல்வரட்ணம்(வயது58 என்பவரே காயமடைந்தவராவர்.

## ஏ. எஸ். பி இடமாற்றம்

(திருமலை)

திருகோணமலை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு கணேசதாசான் எதிர்வரும் ஜனவரி முதலாந் திகதியிருந்து கொழும்பு பொலிஸ் தலமையகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த இரண்டு வருடங்களாகத் திருகோணமலையில் கடமையாற்றியது குறிப்பிடத் தக்கது.

## ஒன்று கூடல்

(தீவகம்)

தீவக கல்விவலயத்தின் வருடாந்த ஒன்றுகூடல்இன்று பகல் வலய பணிமனையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக தீவககல்விப் பணிப்பாளர் திரு. வி. விக்கினேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

வலயத்தின் நிர்வாக அதிகாரி செ. மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் வலயத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோக கலைஞர்கள் பங்குபற்றும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் அருணா இசைக்குழுவினரின் 'இசைமழை' இன்னிசை நிகழ்ச்சி சிறப்பம்சமாக இடம்பெறவிருக்கின்றது.

★ ★ ★

யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்களின் பண்டிகைக்கால வைபவமும் ஒன்று கூடல் நிகழ்வும் இன்று முற்பகல் 10 மணியள்வில் கண்டி வீதியிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் சுகதாரப் பகுதி உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும்.

(ந)

## ஐ. தே. க. எம்.பி. மரணம்

ஐ. தே. கட்சியின் தேசியப்பட்டியல் எம். பியான திருமதி அமராபத்தி திஸநாயக்க நேற்றுக் காலை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மரணமானார்.

புற்று நோயால் பீடிக்கப்பட்டிருந்த இவரை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் கைது

(ஆனைப்பந்தி)

யாழ்ப்பாணம் பகுதியில் நேற்று முன் தினம் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் இது வரையில் விடுவிக்கப்படவில்லை என யாழ்ப்பாணம்மனித உரிமைகள் ஆணைக்குழுஅலுவலகத்தில் புகார் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நவரட்ணம் சிங்க ராசா (29 வயது) ஐந்து சந்தி மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்பவரே படையினரால் கைது செய்யப்பட்டவராவார்.

இவரது கைது குறித்து படையினரால் பற்றுச் சீட்டு வழங்கப்பட்டது.

## பாராளுமன்றம் கலைக்கப்படமாட்டாது அமைச்சர் திசநாயக்கா உறுதி

(கொழும்பு)

தற்போதைய இலங்கை பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதம் வரையுமாகும். எனவே அதற்கு முன்னர் பாராளுமன்றம் எக்காரணம் கொண்டும் கலைக்கப்பட மாட்டாது.

சமுர்த்தி இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திசநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்றம் ஜனவரியில் கலைக்கப்பட்டுஅடுத்த மார்ச் மாதம் பொதுத்தேர்தல் நடாத்தப்படுமென பரவலாகக் கூறப்படுகிறது.

இதில் எதுவித உண்மையும் கிடையாது. பாராளுமன்றம் கலைக்கப்படுவது பற்றி அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் எதுவித முடிவுகளும் மேற்கொளளப்படவில்லை.

பாராளுமன்ற தேர்தல் நடத்தாது அதன் ஆயுட்காலத்தை நீடிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படலாம் என்றும் பரவலாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதில் எதுவித உண்மையும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

## அநுராதபுரம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை யாழ். நீதிமன்றுக்கு மாற்ற நடவடிக்கை

காலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை யாழ்ப்பாண நீதிமன்றில் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மனித கௌரவத்திற்கான அமைப்பின் செயலாளர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார்,

இதேவேளை தமது மனித கௌரவத்திற்கான அமைப்பினால் அநுராதபுர நீதிமன்றில் இருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்களை உடனடியாக யாழ்ப்பாணம் மணியம் கட்டிடத்தில் இயங்கும் தமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## வடபகுதிக்குச் செல்வதற்கு வவுனியாவிலிருந்து 350 பேர் திருமலைக்கு அனுப்பப்பட்டனர்

வவுனியாவிலிருந்து வடபகுதிக்கு கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்காக 350 பேர் நேற்று திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

இவ்வாறு அனுப்பி வைக்கப்படும் மக்கள் திருகோணமலை கண்ணாடித் தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டு அங்கிருந்து வடபகுதிக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

வட பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து நீண்டகாலமாக வவுனியாவிலும் வன்னிப் பெரு நிலப் பரப்பிலும் தங்கியிருந்த வடபகுதி மக்களே மீண்டும் இங்கு அனுப்பப்படவுள்ளனர்.

### பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தம்

காங்கேசன்-திருமலை பயணிகள் கப்பல் சேவை மறு அறிவித்தல்வரை ஒத்திப்போடப்பட்டுள்ளதாக யாழ் சிவில் நிர்வாக பகுதியாளர்கள் நேற்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் பயணத்திற்கான ஏற்பாட்டுடன் நேற்று யாழ். சிங்கள மகா வித்தியாலயத்திற்கு சென்ற பலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

### ஓயாத அலைகள்...

வவுனியா.

★ வீரவேங்கை இனிதன் சுப்புரமணியம் முகுந்தன் முள்ளியவளை.

★ வீரவேங்கை அறிவரசன் கந்தையா புகழேஸ்வரன் கண்டி.

★ வீரவேங்கை வீரதர்சன் அருள்நாயகம் விமலேஸ்வரன் மட்டக்களப்பு.

★ வீரவேங்கை அங்கயற்கண்ணி கதிரவேல் யோகராணி வவுனியா.

★ கப்பன் மானவர்மன் கணேஸ் உதயகுமார் திருமலை,

### தென்மராட்சி...

மற்றும், செம்மணிப் பகுதிகளிலும் நேற்றுக் காலையில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. தனங்கிளப்புப் பகுதியில் புகை மூட்டம் எழுந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இனம்தெரியா...

நிந்தாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை தொடர்வதாகவும் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தபட்டதாகவும் சந்தேகத்திற்கிடமானோர் படையினரால் துருவத்துருவி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரியவருகிறது

### தற்கொலை...

குண்டுநாரி எந்த வழியால் வந்தார் என்று எனக்குத்தெரியாது மாநகரசபை மண்டபத்திற்கு வெளியேகொழும்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரி. என். டி சில்வா பாதுகாப்புக்கு பொறுப்பாகவும் மாநகரசபை மண்டபத்திற்கு உள்ளே ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். என். எஸ் பேரேரா பாதுகாப்புக்கும் பெறுப்பாக இருந்ததாகவும் சாட்சியத்தின் போது தெரித்தார் குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள்ஒன்பது பேரும் சாட்சியமளித்தனர்.

குண்டு வைப்பு இடம்பெற்ற பகுதியான எவ். ஆர். சேனநாக்கா மாவத்தை வீதியை விசாரணை முடிவடையும் வரை மூடவேண்டும் பிரதம நீதியரசர் உத்தரவு பிறப்பிப்பதுடன் தற்கொலை குண்டுதாரியினர் திலகை அவற்றின் இரத்தம் ஆகியவற்றை பாதுகாப்பாக பாதுகாக்கும்படி நீதவான் உத்தரவிட்டு ஜனவரிமாதம் ஏழாம் திகதிக்கு ஒத்தி வைத்தா.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 1999-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.